பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

07 10 2026 7 15

புதன்கிழமை காலை

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சிக்கு தொழில்நுட்பம் ஒரு கருவியாக மாற வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- பொது வாழ்வில் 25 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடியை பாராட்டி மத்திய அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

- இந்தியா – சுவிட்சர்லாந்து இடையே பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவது குறித்து அந்நாட்டு அதிபருடன் மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் பேச்சு நடத்தி உள்ளார்.

- ஃப்ளை துபாய் விமானப் பயணிகளை பத்திரமாக மீட்டதற்காக இந்திய வம்சாவளி விமானி ஸ்மித் மச்சாரை பாராட்டும் தீர்மானம் அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் கொண்டுவரப்பட்டது.

- நியூசிலாந்து அணிக்கு எதிரான டுவென்டி – டுவென்டி தொடரில் பங்கேற்கும் இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<><><><>

அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சிக்கு தொழில்நுட்பம் ஒரு கருவியாக மாற வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியா மொபைல் மாநாடு புதுதில்லியில் இன்று தொடங்கி வரும் 10 ஆம் தேதி வரை நடைபெற உள்ள நிலையில், அந்த மாநாட்டுடன் தொடர்புடைய பிரதிநிதிகளுடன் பிரதமர் நேற்று கலந்துரையாடினார்.

அப்போது பேசிய அவர், தொழில்நுட்பத்தின் பயன்கள் அனைவரையும் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டியது அவசியம் என்று குறிப்பிட்டார்.

குறிப்பாக வளரும் நாடுகளுக்கு தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் எளிதில் அணுகக்கூடியதாகவும், குறைந்த கட்டணத்திலும் கிடைப்பதன் அவசியத்தை பிரதமர் வலியுறுத்தினார்.

டிஜிட்டல் உள்கட்டமைப்பை பொறுத்தவரை வளரும் நாடுகளில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

<><><><>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, பொதுவாழ்வில் 25 ஆண்டுகளை நிறைவு செய்திருப்பதையொட்டி, அவரை பாராட்டி மத்திய அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மத்திய அமைச்சரவை கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், குஜராத் மாநில முதலமைச்சராக 25

ஆண்டுகளுக்கு முன்னர் இதே நாளில் திரு. நரேந்திர மோடி பதவி ஏற்றதாகவும், அவருடைய அர்ப்பணிப்பு மற்றும் மக்களுக்கு முன்னுரிமை என்ற சேவை குறிப்பிடத்தக்கது என்று கூறினார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற 3 மக்களவை தேர்தல்களிலும் பி.ஜே.பி. வெற்றிபெற்று, தொடர்ந்து மூன்றாவது முறையாக பிரதமராக பதவி வகித்து வருவதாகவும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

பிரதமரின் 25 ஆண்டுகால சேவையை கொண்டாடும் வகையில், பி.ஜே.பி. சார்பில் நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 17 ஆம் தேதி தொடங்கி, வரும் 17 ஆம் தேதி வரை சேவை ஜோதி யாத்திரை நடத்தப்பட்டு வருகிறது.

25 ஆண்டு சேவை குறித்த கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, பிரதமர் திரு. நரேந்திர மோடியும், பி.ஜே.பி. தலைவர் திரு. நிதின் நபினும், வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான உறுதிமொழி நிகழ்ச்சியில் இன்று உரையாற்ற உள்ளனர்.

பிரதமர் ஆற்றும் இந்த உரை, நாடு முழுவதும் காணொலி மூலம் ஒளிபரபப்ப்டுகிறது.

நாட்டின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் பி.ஜே.பி. மூத்த தலைவர்கள் காணொலி வாயிலாக பங்கேற்கிறார்கள்.

நீலகிரி மாவட்டம் ஊட்டியில் பிரதமரின் பொதுச் சேவை பயணத்தை கொண்டாடும் வகையில் இன்று நடைபெற உள்ள சேவை ஜோதி யாத்திரை தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர். எல். முருகன் பங்கேற்கிறார்.

இதனை சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இந்த யாத்திரையில் பங்கேற்பது தமக்கு பெருமை அளிப்பதாகவும், பிரதமரின் 25 ஆண்டுகால அர்ப்பணிப்புடன் கூடிய சேவை, உறுதிப்பாடு மற்றும் தேச கட்டமைப்பிற்கான கொண்டாட்டமாக அமைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

<><><><>

இந்தியா – சுவிட்சர்லாந்து இடையே பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவது குறித்து அந்நாட்டு அதிபருடன் மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் பேச்சு நடத்தி உள்ளார்.

புதுதில்லியில் நேற்று சுவிட்சர்லாந்து அதிபர் Guy Parmelin-உடன் திருமதி. நிர்மலா சீதாராமனின் சந்திப்பு குறித்து நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள சமூக வலைதளபதிவில், இரு நாடுகளுக்கும் பரஸ்பரம் நன்மை அளிக்கக்கூடிய வகையில் பேச்சுகள் அமைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலீடுகளை அதிகரித்து ஊக்குவிப்பது மற்றும் இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்வது குறித்தும் அவர்கள் விவாதித்ததாக நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

<><><><>

குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, இமாச்சலப்பிரதேச மாநிலத்தில் மூன்று நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

நேற்று பிலாஸ்பூர் சென்றடைந்த குடியரசுத் தலைவர், எய்ம்ஸ் மருத்துவமனையின் முதலாவது பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று மாணவர்களுக்கு பட்டங்களையும், பதக்கங்களையும் வழங்கினார்.

தமது பயணத்தின் இரண்டாம் நாளான இன்று, குடியரசுத் தலைவர் Rohtang பகுதியில் உள்ள அடல் சுரங்கப்பாலத்தை பார்வையிடுகிறார்.

எல்லை சாலைகள் நிறுவனத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க பணியாக விளங்கும் இந்த சுரங்கப்பாதையின் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளை அவர் பார்வையிட உள்ளார்.

இன்று பிற்பகல் மணாலியில் உள்ள புகழ்பெற்ற Hidimba கோவிலில் குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வழிபாடு செய்கிறார்.

இதையொட்டி, அங்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<><><><>

சுவிட்சர்லாந்து உள்ளிட்ட EFTA நாடுகளுடன் வர்த்தகம் மற்றும் பொருளாதார பங்களிப்பு ஒப்பந்தம் ஏற்பட்டதன் முதலாமாண்டு நிறைவு நாளையொட்டி நடைபெறும் உச்சி மாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடியும், சுவிட்சர்லாந்து அதிபர் திரு. Guy Parmelinனும் இன்று உரையாற்ற உள்ளனர்.

EFTA நாடுகளுடனான பொருளாதார ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில் இரு நாடுகளின் உயரதிகாரிகள், தொழில் நிறுவனங்கள் தலைவர்கள் உள்ளிட்டோர் இம்மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்பம், புதுமை கண்டுபிடிப்பு உள்ளிட்ட துறைகளில் புதிய வாய்ப்புகள் குறித்தும் இந்த மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<><><><>

இந்திய விமானப்படையின் புதிய தளபதியாக ஏர் மார்ஷல் Ashutosh Dixit நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போதைய விமானப்படை தளபதி ஏர் சீஃப் மார்ஷல் Amar Preet Singh வரும் 31 ஆம் தேதியுடன் ஓய்வு பெறுவதையொட்டி, புதிய தளபதியாக Ashutosh Dixit நியமிக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

விமானப்படையில் பல்வேறு பொறுப்புகளை இவர் வகித்து உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

<><><><>

அசாம் மாநிலம் Nagaon மக்களவை தொகுதிக்கும், மேற்குவங்கம், தமிழகத்தில் தலா இரண்டு சட்டப்பேரவை தொகுதிகளுக்கும், புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதிக்கும் நேற்று இடைத்தேர்தல் நடைபெற்று முடிந்துள்ளது.

தமிழகத்தில் தாராபுரம், மதுராந்தகம் தொகுதிகளில் மேற்குவங்க மாநிலத்தின் நந்தி கிராம், ரெஜி நகர் தொகுதியிலும் இடைத்தேர்தல் நடைபெற்றது.

இந்த தொகுதிகளில் பதிவான வாக்குகள் அடங்கிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் சீல் வைக்கப்பட்டு, அந்தந்த வாக்கு எண்ணும் மையங்களுக்கு பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட்டன. அங்கு பலத்த பாதுகாப்புடன் வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ளன.

Nagaon மக்களவை தொகுதி இடைத்தேர்தலில் 76 புள்ளி 2 சதவீத வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தாராபுரத்தில் 80 புள்ளி மூன்று ஒன்று சதவீத வாக்குகளும், மதுராந்தகத்தில் 86 புள்ளி இரண்டு ஆறு சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

நந்தி கிராம் தொகுதியில் 79 புள்ளி மூன்று ஒன்பது சதவீதமும், ரெஜி நகரில் 78 புள்ளி நான்கு இரண்டு சதவீதமும் வாக்குகள் பதிவாகியுள்ளன.

புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலில் 80 புள்ளி எட்டு ஒன்று சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி நாளை மறுநாள் நடைபெற உள்ளது.

<><><><>

எந்தவொரு அரசியல் கட்சி பிரதிநிதிகளும் தேர்தல் ஆணைய அதிகாரிகளை சந்திப்பது குறித்து, நேற்று மாலை 4 மணி வரை கோரிக்கை வைக்கவில்லை என்று தேர்தல் ஆணையம் விளக்கம் அளித்துள்ளது.

மாலை 4 மணிக்கு பின்னர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் தலைமையில் 240 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் ஆணையர்களை சந்திக்க நேரம் கேட்டிருப்பதாகவும்,

நாடாளுமன்ற வளாகத்தில் இந்த சந்திப்புக்கு அனுமதி கோரியிருப்பதாகவும் தில்லி காவல்துறையினர் தெரிவித்ததாக தேர்தல் ஆணையம் வெளியிட்ட செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

எந்தவொரு சந்திப்பானாலும் தேர்தல் ஆணைய வளாகத்திலேயே நடைபெற வேண்டும் என்பதால், அதனை தேர்தல் ஆணையம் ஏற்கவில்லை என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

<><><><>

ஃப்ளை துபாய் விமானப் பயணிகளை பத்திரமாக மீட்டதற்காக இந்திய வம்சாவளி விமானி ஸ்மித் மச்சாரை பாராட்டும் தீர்மானம் அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் கொண்டுவரப்பட்டது.

நியூஜெர்சியை சேர்ந்த ஜனநாயக கட்சியின் உறுப்பினர் Gottheimer இந்த தீர்மானத்தை முன்மொழிந்தார்.

ஸ்மித் மச்சாருடன் விமான ஊழியர்கள் மற்றும் பயணிகளும் இணைந்து அந்த விமானத்தை பாதுகாப்பான முறையில் தரையிறக்கியதை பாராட்டுவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட் அரசுகள் விரைவான விசாரணை நடத்தி அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு அது குறித்த தகவல்களை தெரிவிக்க வேண்டும் என்றும் அந்த தீர்மானத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

<><><><>

நியூசிலாந்து அணிக்கு எதிரான டுவென்டி – டுவென்டி தொடரில் பங்கேற்கும் இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரேயாஸ் ஐயர் தலைமையிலான அணியில் வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ் குமார் நான்கு ஆண்டுகளுக்கு பின்னர் அணியில் இடம்பெற்றுள்ளார்.

இதனிடையே வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான முதலாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

லக்னோவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் டாஸ் வென்ற இந்தியா பந்துவீச்சை தேர்வு செய்தது.

இதையடுத்து முதலில் விளையாடிய வெஸ்ட் இண்டீஸ் அணி 19 புள்ளி ஒரு ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 171 ரன் எடுத்தது.

172 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்திய அணி 14 புள்ளி ஒரு ஓவரில் 2 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து இலக்கை எட்டியது.

தொடக்கக் ஆட்டக்காரர்கள் சஞ்சுவ் சாம்சன் 11 ரன்னுக்கும், அபிஷேக் ஷர்மா 21 ரன்னுக்கும் ஆட்டமிழந்தனர். எனினும், ஸ்ரேயாஸ் ஐயர் 43 பந்துகளில் 102 ரன்னும், இஷான் கிஷன் 27 பந்துகளில் 37 ரன்னும் சேர்த்து ஆட்டமிழக்காமல் அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றனர்.

<><><>

சீன ஓபன் டென்னிஸ் சாம்பியன் பட்டத்தை செர்பியாவின் Novak Djokovic ஏழாவது முறையாக வென்றுள்ளார்.

நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் ஆஸ்திரேலியாவின் Alex De Minaur, காயம் காரணமாக விலகியதால் Novak Djokovic வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

<><><>